**<u>IN THE COURT OF THE PRINCIPALDISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 409/2007**

Deposition of **<u>D.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 24.02.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : அன்புராஜன் Father's Name : தியாகராஜன்

துவக்க நேரம்: 03.30 P.M

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் மல்லியக்கரை கிராம ச.எண். 304/2 ஆகும். வாதி இவ்வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி தானமாக வழங்கிய சொத்தில் பொது ரோடு அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்பொழுது அந்த சொத்தை கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை இவ்வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தினாரா அல்லது முன்னிட்டு ஏற்படுத்தினாரா என்றால் கடந்த 2008-ல் தான செட்டில்மெண்ட் கொடுத்துள்ளார், இவ்வழக்கு 2007-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வாதி இவ்வழக்கை தாக்கல் செய்த பொழுது தாவா சொத்தில் பாதை எதுவும் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. வாதி தாக்கல் செய்த வழக்கின் விவரமும், நான் தாக்கல் செய்த பதிலுரை மற்றும் வாதியின் கூடுதல் வழக்குரையில் கூறப்பட்டுள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு தாக்கல் செய்த பொழுது ச.எண்.304/2 -ல் உள்ள ஏக்.3.00 செண்ட் நிலம் முழுவதும் வாதிக்கு சொந்தமானது

என்றால் சரிதான். தாவா சொத்தை நான் நேரில் பார்வையிட்டுள்ளேனா என்றால் பார்வையிட்டுள்ளேன்.

3. வாதி 1-ஆம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்ததாக கூறும் தான செட்டில்மெண்ட் பத்திரத்தை எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி எழுதிக் கொடுத்ததாக கூறப்படும் இடத்தின் நான்கெல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு தெற்கில் சன்னாசி வரதர் மலை உள்ளது என்றால் சரிதான். மேற்படி மலை அமைந்துள்ள இடம் அரசுக்கு சொந்தமானது என்றால் சரிதான். மேற்படி மலையில் உள்ள வனம் சமூக காடுகள் என்ற வகைபாட்டின் கீழ் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி சமூக காடு எங்களின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி காட்டில் பாதை அமைக்கவேண்டுமென்றால் வனத்துறையினரிடம் முன் அனுமதி பெறவேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை.

4. வாதி தானசெட்டில்மெண்ட் மூலம் எழுதிக் கொடுத்த இடம் தாவா சொத்திற்கு தெற்கில் அமைந்துள்ளது என்றால் திசை எனக்கு தெரியவில்லை, ஆனால் வாதி எழுதிக் கொடுத்துள்ள இடத்தில்தான் ரோடு அமைத்துள்ளோம். தாவா சொத்தில் உள்ள ரோட்டிற்கு தென்புறத்தில் வாதி மாட்டுக்கொட்டகை மற்றும் உழவடை செய்து அனுபவம் செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியவில்லை. நான் சொல்வது போல் வாதி தானமாக கொடுத்த இடத்தில் பாதை அமைக்கப்படவில்லை என்றாலும், நான் சொல்வது போல் பாதை தாவா சொத்தில் இல்லை என்றாலும் சரியல்ல.

5. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆனது தாவா சொத்திற்குரிய கணினி பட்டா என்றாலும், அது வாதி பெயரில் உள்ளது என்றாலும் சரிதான். வாதி தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் தேதிக்கு பின்னிட்டு மேற்படி சர்வே எண் உட்பிரிவு

செய்யப்பட்டு 1-ஆம் பிரதிவாதி பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டதா என்றால் இல்லை. வாதி எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் உண்மையானது என்றாலும், அதனடிப்படையில் ரோடு அமைக்கப்பட்டது என்றாலும், அந்த இடமானது உட்பிரிவு செய்யப்பட்டு வருவாய் ஆவணங்கள் 1-ஆம் பிரதிவாதியின் பெயருக்கு மாற்றப்பட்டிருக்கும் என்றாலும் சரியல்ல, பொதுவாக அரசாங்கத்திற்கு வழங்கப்படும் சொத்திற்கு மனுவின் பேரில் தனியாக உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா மாற்றம் செய்யப்படுவதில்லை, வருவாய் துறையே மாற்றம் செய்துவிடும். அவ்வாறு வருவாய் துறையினரால் வருவாய் ஆவணங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

6. தாவா சொத்தில் அமைந்துள்ள ரோடானது எந்த திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது என்றால் SGRY திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் 29.11.2007 தேதியிட்ட ந.க.எண்.2043/2006/ஆ 4 நடைமுறை எங்கள் அலுவலகத்தின் மூலம் மாவட்ட ஆட்சியர் சேலம் அவர்களுக்கு அனுப்பப்பட்டது என்றால் அதற்கான கோப்புகளை பார்த்தால்தான் என்னால் கூற இயலும். (மேற்படி ஆவணம் குறித்து சாட்சியம் அளிக்க அது தொடர்பான ஆவண கோப்புகளுடன் ஆஜராக வேண்டி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

முடிவு நேரம்: 03.58 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct

sd/-D.Jansirani
Principal District Munsif (FAC), Attur.

Typed by Tmt.L.Kalaiselvi - O.S. No. 409/2007, Dt.24.02.2026.